O.S. 174 /2012

Dated : 06.09.2022

Time: 12.00 P.m. To 12.29 p.m.

D.W. - 2 சத்தியமூர்த்தி சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு மீண்டும் வரவழைக்கப்பட்டு

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

பி.வா.சா. 2 ன் அசல் தான் பி.வா.சா.11 ஆகும். அதில் உள்ள சொத்துக்கள் 07.04.1999 தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலம் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் தான். அது முத்திரைத்தாள் குறைவாக உள்ளது என மாவட்ட பத்திர பதிவுஅதிகாரிடம் அனுப்பட்டது என்றால் சரிதான். அந்த அசல் பத்திரமும் அலுவலகத்தில் காணாமல் போய்விட்டது. அந்த அசல் பத்திரத்திற்கு கூடுதலாக 23,228 ரூபாய் செலுத்துமாறு எனக்கு உத்தரவிடப்பட்டது. அந்த உத்தரவு தான் என்னிடம் காட்டப்படும் பத்திரம் என்றால் சாட்சி அதற்கு இல்லை என்று சொல்லுகிறார், தன்னிடம் சான்றிட்ட நகல் இருந்ததாகவும், அது காணாமல் போய்விட்டது என்றும் சொல்லுகிறார். என் பெரியப்பா துரைராஜ் தான் எனக்கு கிரையம் கொடுத்தார். 09.05.2022 ல் நாளிதழில் 07.04.1999 தேதியிட்ட பத்திரம் காணாமல் போய்விட்டது என்று நான் கொடுத்த அறிவிப்பு தான் பி.வா.சா.12 ஆகும்.

இந்த அறிவிப்பிற்கு பின்னிட்டு 14.05.2022 ல் பத்திரம் காணவில்லை என்று புகார் கொடுத்தேன். 04.07.2022 தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் அதே தேதியில் சசிகலா என்பவருக்கு நான் ரூபாய் 29,00000/-கிரையம் கொடுத்துவிட்டேன். அவர் என்னுடைய உறவினர் என்றால் இல்லை. அவ்வாறு விற்பனை செய்த சொத்து 2.60 ஏக்கர் நிலம் ஆகும். அந்த நிலம் தான் பி.வா.சா.ஆ.11 ல் சொல்லப்பட்ட இடம் ஆகும். மேற்படி சின்னையன் இடம் பொது அதிகார பத்திரம் மற்றும் அசல் கிரைய பத்திரத்தையும் கொடுத்து விட்டு பின் அந்த அசல் தொலைந்துவிட்டது என பொய்யாக நடவடிக்கை மேற்கொண்டு சசிகலாவிற்கு உண்மையை மறைத்து கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் தவறு. நான் பி.சா.ஆ.11 ரத்து செய்துவிட்டேன். 04.07.2022 கிரையப்பத்திரம் குறித்து மாவட்ட பதிவாளர் முன்னிலையும், மாவட்ட தனித்துணைஆட்சியர் முத்திரை கட்டணம் அவர் முன்பும் விசாரணை நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

மேற்படி **1** ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை வாதி ஏற்றுக்கொள்கிறார்

மறு விசாரணை இல்லை

" என்னால்/ என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Subordinate Judge,**
**Attur.**